# வேல் மாறல்

வள்ளிமலை ஸ்ரீஸச்சிதானந்த சுவாமிகள் தொகுத்து அருளியது

... வேலும் மயிலும் சேவலும் துணை ... (6 times)

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (12 times)

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்த நகை கறுத்த குழல்
சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும். 1.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே 2.

சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை
அறுத்தெறிய உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் 3.

தருக்கி நமன் முருக்கவரின் எருக்கு மதி தரித்த முடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்கு நிகர் ஆகும் 4.

பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்(து) இடு(ம்) நிகளத்துமுளை தெறிக்கவரம் ஆகும் 5.

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத் தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் 6.

துதிக்கும் அடியவர்க்கொருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தை முதல் அறக்களையும் எனக்கோர் துணை ஆகும் 7.

தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண வழைப்பதென
மலர்க் கமல கரத்தின் முனை விதிர்க்க வளை வாகும் 8.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு) உருகி வரைக்குகையை இடித்துவழி காணும் 9.

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்த சிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் 10.

சுடர்ப்பரிதி ஒளிப்பநில ஒழுக்குமதி ஒளிப்ப அலை
அடக்குதழல் ஒளிப்ப ஒளிர் ஒளிப்பிரபை வீசும் 11.

தனித்துவழி நடக்கும் என திடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அருகடுத்திரவு பகற்றுணைய தாகும் 12.

பசித்தலகை முசித்தழுது முறைப் படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்க அருள் நேரும் 13.

திரைக் கடலை உடைத்து நிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்து விளை யாடும் 14.

சுரர்க்கு(ம்) முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி
தனக்கும் நரர் தமக்கும் உறும் இடுக்கண் வினை சாடும் 15.

சலத்து வரும் அரக்கர் உடல் கொழுத்து வளர் பெருத்த குடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் 16.

சுரர்க்கு(ம்) முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி
தனக்கும் நரர் தமக்கும் உறும் இடுக்கண் வினை சாடும் 17.

சலத்து வரும் அரக்கர் உடல் கொழுத்து வளர் பெருத்த குடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் 18.

பசித்தலகை முசித்தழுது முறைப் படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்க அருள் நேரும் 19.

திரைக் கடலை உடைத்து நிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்து விளை யாடும் 20.

சுடர்ப்பரிதி ஒளிப்பநில ஒழுக்குமதி ஒளிப்ப அலை
அடக்குதழல் ஒளிப்ப ஒளிர் ஒளிப்பிரபை வீசும் 21.

தனித்துவழி நடக்கும் என திடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அருகடுத்திரவு பகற்றுணைய தாகும் 22.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு) உருகி வரைக்குகையை இடித்துவழி காணும் 23.

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்த சிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் 24.

துதிக்கும் அடியவர்க்கொருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தை முதல் அறக்களையும் எனக்கோர் துணை ஆகும் 25.

தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண வழைப்பதென
மலர்க் கமல கரத்தின் முனை விதிர்க்க வளை வாகும் 26.

பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்(து) இடு(ம்) நிகளத்துமுளை தெறிக்கவரம் ஆகும் 27.

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத் தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் 28.

சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை
அறுத்தெறிய உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் 29.

தருக்கி நமன் முருக்கவரின் எருக்கு மதி தரித்த முடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்கு நிகர் ஆகும் 30.

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்த நகை கறுத்த குழல்
சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும். 31.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே 32.

தருக்கி நமன் முருக்கவரின் எருக்கு மதி தரித்த முடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்கு நிகர் ஆகும் 33.

சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை
அறுத்தெறிய உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் 34.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே 35.

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்த நகை கறுத்த குழல்
சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும். 36.

தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண வழைப்பதென
மலர்க் கமல கரத்தின் முனை விதிர்க்க வளை வாகும் 37.

துதிக்கும் அடியவர்க்கொருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தை முதல் அறக்களையும் எனக்கோர் துணை ஆகும் 38.

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத் தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் 39.

பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்(து) இடு(ம்) நிகளத்துமுளை தெறிக்கவரம் ஆகும் 40.

தனித்துவழி நடக்கும் என திடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அருகடுத்திரவு பகற்றுணைய தாகும் 41.

சுடர்ப்பரிதி ஒளிப்பநில ஒழுக்குமதி ஒளிப்ப அலை
அடக்குதழல் ஒளிப்ப ஒளிர் ஒளிப்பிரபை வீசும் 42.

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்த சிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் 43.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு) உருகி வரைக்குகையை இடித்துவழி காணும் 44.

சலத்து வரும் அரக்கர் உடல் கொழுத்து வளர் பெருத்த குடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் 45.

சுரர்க்கு(ம்) முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி
தனக்கும் நரர் தமக்கும் உறும் இடுக்கண் வினை சாடும் 46.

திரைக் கடலை உடைத்து நிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்து விளை யாடும் 47.

பசித்தலகை முசித்தழுது முறைப் படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்க அருள் நேரும் 48.

திரைக் கடலை உடைத்து நிறை புனற்கடிது குடித்துடையும்
உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்து விளை யாடும் 49.

பசித்தலகை முசித்தழுது முறைப் படுதல் ஒழித்தவுணர்
உரத்துதிர நிணத்தசைகள் புசிக்க அருள் நேரும் 50.

சலத்து வரும் அரக்கர் உடல் கொழுத்து வளர் பெருத்த குடர்
சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும் 51.

சுரர்க்கு(ம்) முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி
தனக்கும் நரர் தமக்கும் உறும் இடுக்கண் வினை சாடும் 52.

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்த சிறை முளைத்ததென
முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும் 53.

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு) உருகி வரைக்குகையை இடித்துவழி காணும் 54.

தனித்துவழி நடக்கும் என திடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அருகடுத்திரவு பகற்றுணைய தாகும் 55.

சுடர்ப்பரிதி ஒளிப்பநில ஒழுக்குமதி ஒளிப்ப அலை
அடக்குதழல் ஒளிப்ப ஒளிர் ஒளிப்பிரபை வீசும் 56.

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத் தலைகள்
சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும் 57.

பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள்
பதத்(து) இடு(ம்) நிகளத்துமுளை தெறிக்கவரம் ஆகும் 58.

தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண வழைப்பதென
மலர்க் கமல கரத்தின் முனை விதிர்க்க வளை வாகும் 59.

துதிக்கும் அடியவர்க்கொருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தை முதல் அறக்களையும் எனக்கோர் துணை ஆகும் 60.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே 61.

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்த நகை கறுத்த குழல்
சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும். 62.

தருக்கி நமன் முருக்கவரின் எருக்கு மதி தரித்த முடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்கு நிகர் ஆகும் 63.

சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை
அறுத்தெறிய உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் 64.

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (12 times)

தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை.

… … … வேலும் மயிலும் சேவலும் துணை … … … (6 times)